# FIRST INFORMATION REPORT

**முதல் தகவல் அறிக்கை**

(Under Section 154 Cr.P.C.)

(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

**TAMIL NADU POLICE**

INTEGRATED INVESTIGATION FORM-I

C 8097110

1. District மாவட்டம் Chennai | PS காவல்நிலையம் V & AC | Year ஆண்டு 2019 | FIR No மு.த.அ. எண் 07 | Date நாள் 29-03-19

2. (i) Act சட்டம் PC Amended Act 2019 | Sections பிரிவுகள் Sec 7 & 7A of
   (ii) Act சட்டம்: | Sections பிரிவுகள் Prevention of Corruption
   (iii) Act சட்டம்: | Sections பிரிவுகள் Amended Act 2018
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் | Date from நாள் முதல் 27.03.19 @ about | Date to : நாள் வரை
   Time Period : நேர அளவு | Time from நேரம் முதல் 16.00 Hrs. | Time to : நேரம் வரை
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 28.03.19 | Time : நேரம் 15.30 Hrs.
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் | Time : நேரம்

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக Written

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் North - West 15 km (Appox)
   Beat Number : முறைக் காவல் எண் | (b) Address : முகவரி —
   (c) In case outside limit of this Police Station, then the Name of P S இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் | District மாவட்டம் —

6. Complainant /Informant (a) Name குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் G. Balaji M/41 | (b) Father's/ Husband's Name தந்தை / கணவர் பெயர் Gopal
   (c) Date / Year of Birth நாள் / பிறந்த ஆண்டு 41/2019 | (d) Nationality நாட்டினம் Indian | (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
   Date of Issue : வழங்கப்பட்ட நாள் | Place of Issue : வழங்கப்பட்ட இடம்
   (f) Occupation தொழில் : Call - Taxi Driver. | (g) Address முகவரி No. 1, First Floor, HIG - II, Mogappair Eri Scheme., Mogappair, Chennai - 37.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary) தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
   (1) Tr. Karthick, Motor Vehicle Inspector, Poonamallee
   (2) Tr. Deepan, Lakshmi Agency, Paruthipet.

8. Reasons for delay in reporting by the complainant / Informant: குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
   —

* GCP 240-34(Type 2) 90 000 Cps -21 3 16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் கருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

— Separate Sheet Enclosed -

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed K. Arunasree Rank Inspr ........ to take up the Investigation / Refused Investigation / transferred to PS ........................................on point of jurisdiction.

V & AC · / CC-II

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுத்தல் ............................... பதவி ....................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ................................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

[signature] 29/3/19

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

[signature]

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

29/03/2019

Name: பெயர் K. Arunasree
Rank: நிலை Inspector ........ No. எண் ..........
CC-II / V & AC
Chennai

பணிந்தனுப்பப்படுகிறது:- நான் 28.03.2019-ந் தேதி 15.30 மணிக்கு சென்னை, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, சென்னை நகரப்பிரிவு -2-ன் காவல் ஆய்வாளர் K.அருணாஸ்ரீ ஆகிய நான் அலுவகத்தில் பணியிலிருந்தபோது சென்னை முகப்பேரை சேர்ந்த திரு.G.பாலாஜி என்பவர் அலுவலகம் வந்து கொடுத்த எழுத்து மூலமான புகாரினை பெற்று அதன் பேரில் மறைமுக விசாரணை செய்து இன்று 29.03.2019-ந் தேதி காலை 10.30 மணிக்கு வழக்கு பதிவு செய்தேன். எழுத்து மூலமான புகாரின் விவரம் பின்வருமாறு:- அனுப்புநர் G.பாலாஜி, வ/41, த/பெ.கோபால், எண்.1, முதல் மாடி HIG -II, முகப்பேர் ஏரி திட்டம், முகப்பேர், சென்னை-37. பெறுநர் ஆய்வாளர் அவர்கள், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை, ஆலந்தூர், சென்னை. அய்யா, பொருள்: என்னிடம் லஞ்சம் கேட்ட நபர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டி நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் எனது மனைவி B.தனலட்சமி அவர்கள் பெயரில் செவர்லட் Travera TN 12 S 7754 வண்டியை வாங்கி OLA கால் டாக்சியில் ஓட்டி வருகிறேன். எங்கள் வண்டியின் FC 31.03.2019 அன்றுடன் முடிகிறது. அதனால் நான் பருத்திபட்டில் உள்ள பூவிருந்தவல்லி வட்டார போக்குவரத்து அலுவலகத்திற்கு சென்று FC செய்ய வேண்டும் என்று கேட்டேன். அதற்கு என்னை அலைகழித்தனர். பின்பு மோட்டார் ஆய்வாளர் கார்த்திக் அவர்களை சந்தித்தேன். அதற்கு அவர் நீ அலைய வேண்டாம். வட்டார போக்குவரத்து அலுவலகம் எதிரில் உள்ள பார்க்கில் இடது பக்கம் உள்ள இரண்டாவது சந்தில் இருக்கும் லஷ்மி ஏஜேன்சி என்ற பெயரில் RTO ஏஜென்சி நடத்தும் தீபன் அவர்களை சந்திக்கும்படி சொன்னார். அதன்படி நான் பார்க்கில் இரண்டாவது சந்தில் உள்ள லஷ்மி ஏஜென்சி சென்று தீபன் அவர்களை சந்தித்தேன். தீபன் அவர்கள் FC கட்டணம் ரூ.650/- தனக்கு சர்வீஸ் கட்டணம் ரூ.1000/- முன்னதாக தரவேண்டும் என்று சொன்னார். நான் 09.03.2019 அன்று ரூ.1650/- பணத்தையும், வண்டி ஆவணங்களையும் சேர்த்து தீபனிடம் கொடுத்துவிட்டேன். பிறகு தீபன் பணத்தை வாங்கிக்கொண்டு நான் கூப்பிடும்போது வண்டியுடன் வந்தால் போதும் என்று சொன்னார். தீபன் அவர்கள் 12.03.2019 அன்று என்னை FC காட்ட வரும்படி அழைத்தார். அதன் அடிப்படையில் நான் 12.03.2019 அன்று சுமார் 11.30 மணிக்கு வட்டார போக்குவரத்து அலுவலகத்திற்கு சென்றேன். அங்கு தீபனும் வந்திருந்தார். தீபன் என்னை FC காட்டும் இடத்தில் வண்டியை நிறுத்தசொன்னார். நானும் அவரும் அந்த இடத்தில் மோட்டார் ஆய்வாளர் கார்த்திக் அவர்களின் வருகைக்காக காத்திருந்தோம். மோட்டார் வாகன ஆய்வாளர் கார்த்திக் அவர்கள் மற்ற வாகனங்களை ஆய்வு செய்து கொண்டு இருந்தார். சுமார் மதியம் 1 மணிக்கு எனது வண்டியிடம் வந்து எனது வண்டியை ஆய்வு செய்து விட்டு வண்டியின் பெயிண்ட சரியாக அடித்துவிட்டு காண்பிக்கும்படி தெரிவித்து ரிஜெக்ட் செய்துவிட்டார். நான் உடனே அருகில் இருந்த தீபனை பார்த்தேன். தீபன் என்னை வண்டியை அங்கிருந்து சிறிது தூரம் தள்ளி நிற்கும்படி சொன்னதால் சுமார் 100 மீட்டர் தள்ளி நிறுத்தினேன். தீபன் என்னிடம் வந்து நீங்கள் கிளம்புங்கள் நான் FC முடித்து தருகிறேன்

என்றார். நான் மறுநாள் தீபனை கைபேசியில் அழைத்து FC நிலைப்பற்றி கேட்டேன். அதற்கு FC ஆகவில்லை என்றார். இது போலவே மூன்று நான்கு நாட்கள் கேட்கும்போதெல்லாம் FC ஆகவில்லை என்றார். கடைசியாக தீபன் என்னிடம் ரூ.2500/- மோட்டார் ஆய்வாளர் கார்த்திக் அவர்கள் கேட்டதாகவும் அந்த பணத்தை கொடுத்தால் உடனே FC செய்து விடுவார் என்றார். நான் கார்த்திக், மோட்டார் ஆய்வாளரிடம் பேசுகிறேன் என்றேன். அதற்கு அது உங்கள் சவுகரியம் என்றார். அதனால் நான் கடந்த செவ்வாய்கிழமை (26.03.2019) அன்று கார்த்திக் அவர்களை அலுவலகத்தில் சந்தித்தேன். எனது FC தகுதிசான்று பற்றி கேட்டேன். அப்போது ஆய்வாளர் அவர்கள் நீ என்னிடம் வரக்கூடாது தீபனை போய் பார் என்று விரட்டி விட்டார். அதனால் நான் 27.03.2019 அன்று மாலை 4 மணியளவில் தீபனிடம் சென்று ஆய்வாளர் கார்த்திக் எதுவும் சொல்ல மறுக்கிறார் உங்களிடம் தான் கேட்க வேண்டும் என்றார் என்று சொன்னேன். தீபன் அதற்கு சிரித்துவிட்டு நான்தான் முதலிலேயே சொன்னேனே மேற்கொண்டு ரூ.2500/- கொடுத்தால்தான் FC கிடைக்கும் என்றார். நான் சர்வீஸ் கட்டணம் ரூ.1000/-, FC கட்டணத்தொகை ரூ.650/- ஏற்கனவே உங்களிடம் கொடுத்து விட்டேனே என்றதற்கு அவர் ரூ.1000/- தன்னுடைய சர்வீஸ் சார்ஜ் என்றும், மோட்டார் ஆய்வாளர் கார்த்திக் அவர்களுக்கு லஞ்சமாக ரூ.2500/- கொடுக்க வேண்டும் என்றார் இல்லாவிட்டால் எத்தனை முறை பெயிண்ட் அடித்து விட்டு வந்தாலும் ஏதாவது ஒரு வகையில் ரிஜெக்ட் செய்வார்கள் என்றார். நான் அவ்வளவு பணம் என்னால் தரமுடியாது என்று சொன்னேன். உடனே தீபன் மோட்டார் ஆய்வாளர் கார்த்திக் அவர்களை சென்று பார்த்து விட்டு வந்து என்னிடம் மோட்டார் ஆய்வாளர் அவர்கள் ரூ.1000/- குறைத்து கொண்டு ரூ.1500/- கொடுக்கும்படி சொன்னதாக தெரிவித்தார். எனக்கு அவர்கள் கேட்ட லஞ்சபணம் கொடுக்க விருப்பமில்லை. எனவே என்னை கடந்த இரண்டு வாரமாக FC செய்வதற்கு அலைக்கழித்து லஞ்சமாக ரூ.1500/- கேட்ட, மோட்டார் ஆய்வாளர் கார்த்திக் மற்றும் அவர்களுக்கு ஏஜெண்டாக செயல்படும் தீபன் ஆகியோர்கள் மீது தக்க நடவடிக்கை எடுக்குமாறு தங்களை கேட்டுக் கொள்கிறேன். இப்படிக்கு Sd. XXX G. பாலாஜி.

Honorable Sir,

On 28.03.2019 at 15.30 hrs, I received the above complaint and made confidential enquiry with the permission of DVAC and after the outcome of confidential enquiry, (Sd. XXX K.Arunasree, Inspector of Police). Today 29.03.2019 at 10.30 hrs I registered a case in V &AC, Chennai City –II, Cr. No.07/AC/2019/CC-II, U/s. 7 and 7 A of PC Act 1988 (amended Act 2018). The original FIR along with complaint submitted before the Hon'ble Chief Judicial Magistrate Cum Special Judge court, Thiruvallur and other copies submitted to officer concerned.

29/3/19
K. Arunasree
Inspector, V & AC
Chennai City - II.